பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
23 10 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- புதுதில்லி வந்துள்ள சிங்கப்பூர் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Ng eng hen** - குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை நேற்று சந்தித்து பேசினார்.
- பிரதமர் திரு நரேந்திரமோடி, சீனா-வுடனான எல்லைப் பிரச்சினை குறித்து இன்று ரஷ்யாவில் அந்நாட்டு அதிபர் திரு ஸீ ஜிங் பிங்-வுடன் பேச்சு நடத்த உள்ளதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.
- சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் நிலக்கரி உற்பத்தியை மேற்கொள்ள வேண்டுமென்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிஷன்ரெட்டி கேட்டுக் கொண்டுள்ளார்.
- வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுமண்டலம் இன்று புயலாக வலுப்பெறக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- வியன்னா ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோகன் போப்பண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

புதுதில்லி வந்துள்ள சிங்கப்பூர் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Ng eng hen** - குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை, குடியரசுத் தலைவர் மாளிகையில் சந்தித்து பேசினார்.

அப்போது இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு வரலாற்று சிறப்புமிக்கது என்று திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

அண்மையில் பிரதமர் திரு நரேந்திரமோடி மேற்கொண்டசிங்கப்பூர் பயணத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு மேலும் வலுவடைந்தள்ளதாக அவர் கூறினார்.

இரு நாடுகளும் பாதுகாப்பு ஆராய்ச்சித் துறையின் நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்வதன் மூலம் இந்த துறையின் தொழில்நுட்பம் மேம்பட வாய்ப்பு இருப்பதாக அவர் நம்பிக்கை தெரிவீத்தார்.

**[]<<<>>>[]**

பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக ரஷ்யா சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி, இன்று சீன அதிபர் திரு ஸீ ஜின் பிங்-யை சந்தித்து பேச இருப்பதாக வெளியுறவுத்துறை செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி  தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் கஸானில் நடைபெற்று வரும் பிரிக்ஸ் மாநாடு தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக இரு தலைவர்களும் சந்தித்து பேச உள்ளதாக கூறினார்.

இந்த சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையேயான எல்லை பிரச்சினை குறித்து விவாதிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

திரு நரேந்திரமோடி நேற்று ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டின் மற்றும் ஈரான் அதிபர் திரு **Masoud pezeshkian**-யும் சந்தித்து பேசினார்.

அப்போது ரஷ்யா- உக்ரைன், இஸ்ரேல், பாலஸ்தீனம், லெபனான் இடையே நடைபெற்று வரும் சண்டைகள் குறித்து தமது கவலையை பிரதமர் தெரிவித்தாக அவர் கூறினார்.

இந்த நாடுகள் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமென்றும் பிரதமர் வலியுறுத்தியதாக வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாக தெரிவித்தார்.

இதற்கிடையே நேற்று கஸானில் பிரிக்ஸ் நாடுகள் சார்பாக நடைபெற்ற இரவு விருந்தில் பிரதமர் திரு நரேந்திரமோடி கலந்து கொண்டார்.

**[]<<<>>>[]**

தேசிய நெடுஞ்சாலை திட்டங்கள் குறித்து மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி நேற்று புதுதில்லியில் ஆய்வு மேற்கொண்டார்.

அஸ்ஸாம், சிக்கிம், மிசோராம் மாநிலங்களில் நடைபெற்று வரும் 57 தேசிய நெடுஞ்சாலை திட்டங்கள் குறித்து அவர் இந்த கூட்டத்தில் விவாதித்தார்,

இந்த திட்டங்களை துரிதமாக மேற்கொள்வது தொடர்பாகவும், குறைந்த செலவில் தரமான சாலைகளை அமைப்பது குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார்.

அஸ்ஸாம் மாநிலத்தில் ஆயிரம் கிலோமீட்டர் தொலைவில் அமைக்கப்பட உள்ள சாலைகள் குறித்தும், 309 கிலோமீட்டர் தொலைவில் சிக்கிமில் அமைக்கப்பட்டு வரும் சாலைப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் திரு நிதின்கட்கரி கேட்டறிந்தார்.

இந்த கூட்டத்தில் மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால், நெடுஞ்சாலைத்துறை இணை அமைச்சர்கள் திரு அஜய் டமட்டா, திரு ஹர்ஸ் மல்கோத்ரா, அஸ்ஸாம் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வா சர்மா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

[]<<<>>>[]

மருத்துவத் துறையில் உலகின் தலைசிறந்த நாடாக இந்தியா திகழ்வதற்கு பிரதமர் திரு நரேந்திரமோடி ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தி வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செவிலியர்களுடன் நேற்று கலந்துரையாடிய அவர், தற்போது இந்தியாவில் 23 எய்ம்ஸ் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், மருத்துவ படிப்பிற்கான இடங்கள் ஒரு லட்சமாக அதிகரித்துள்ளதாகவும் கூறினார்.

இந்தியாவின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு அவசியமானது என்று குறிப்பிட்ட அவர், மருத்துவத் துறையின் எதிர்காலத்தை கட்டமைப்பதற்கு இளைஞர்கள் அதிக அளவில் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இந்திய மற்றும் அயல் மொழிகளை கற்றுக் கொள்வதன் மூலம் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும் திரு எல் முருகன் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

பாகிஸ்தானில் உள்ள ஸ்ரீகர்த்தார்பூர் சாஹிப் குருத்வாராவிற்கு இந்தியாவிலிருந்து பக்தர்கள் சென்றுவர மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கான ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையே நேற்று கையெழுத்தானது.

அங்கு செல்லும் பக்தர்களுக்கு பாகிஸ்தான் 20 டாலர் சேவை வரியாக விதித்து வருவதை திரும்பப்பெற வேண்டுமென்று இந்தியாவின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சடர் டாக்டர் ஜெய்சங்கர் வெளிட்டுள்ள வலைதளப்பதிவில், சீக்கிய சமுதாயத்தினர் தங்களது புனித தலத்திற்கு சென்றுவர பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு துணை நிற்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் நிலக்கரி உற்பத்தியை மேற்கொள்ள வேண்டுமென்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிஷன்ரெட்டி கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நேற்று அத்துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட அவர், புதுமையான தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி உற்பத்தியை அதிகரிப்பதுடன், சுற்றுச்சூழலில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தாத வகையில் நடவடிக்கை அமைய வேண்டுமென்று வலியுறுத்தினார்.

நிலக்கரி சுரங்கத்தில் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார்.

சமூக அக்கறையுடன் செயல்பட்டு உள்ளூர் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

புதிய திட்டங்கள் குறித்தும், எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் திரு கிஷன்ரெட்டி ஆலோசனை நடத்தினார்.

[]<<<>>>[]

55-வது கோவா சர்வதேச திரைப்பட விழா அடுத்த மாதம் 20-ஆம் தேதி தொடங்கி 28-ஆம் தேதி வரை நடைபெறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திரைப்பட விழாவில் பங்கேற்பதற்கு **my.iffigoa.org** என்ற இணையதளத்தில் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரைப்படத் துறையினர் மற்றும் ரசிகர்கள் ஆயிரத்து 180 ரூபாய் கட்டணமாக செலுத்த வேண்டுமென்றும், மாணவர்களுக்கு ஒரு நாளைக்கு நான்கு டிக்கெட்கள் இலவசமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

வெளிநாடுகளிலிருந்து போதைப்பொருட்கள் கடத்தியது தொடர்பாக ஆறு பேரை அமலாக்கத்துறையினர் கைது செய்துள்ளனர்.

சட்ட விரோத பண பரிவர்த்தனை சட்டத்தின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டள்ளதாக அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

இவர்களிடமிருந்து 293 கிலோ ஹெராயின் போதைப்பொருளை அவர்கள் பறிமுதல் செய்துள்ளனர்.

இதற்கிடையே தில்லியில் பரிதாபாத் என்ற இடத்தில் இரண்டு வாகனங்களில் 353 கிலோ ஹெராயின் போதைப்பொருளை கடத்தி சென்றவர்களை தில்லி காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

[]<<<>>>[]

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுமண்டலம் இன்று புயலாக வலுப்பெறக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த டானா நாளை இரவு ஒடிஸா மாநிலம் பூரிக்கும் - மேற்குவங்க மாநிலம் சாஹர் தீவுக்கும் இடையே கரையைக் கடக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஒடிஸா மற்றும் வடகிழக்கு மாநிலங்களில கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக அது கூறியுள்ளது.

புயல் மற்றும் கனமழையை அடுத்து ஒடிஸா மாநிலத்தில் ஐயாயிரம் நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அமைச்சர் தெரிவித்துள்ளார்.

டானா புயல் எச்சரிக்கை காரணமாக மேற்குவங்க மாநிலத்தில் ஒன்பது மாவட்டங்ககளில் உள்ள பள்ளிக் கல்லூரிகளுக்கு இன்று முதல் மூன்று நாட்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது

தமிழ்நாடு, புதுச்சேரி, கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே புயல் மற்றும் கனமழையை அடுத்து ஒடிஸா – மேற்குவங்க மாநிலங்களுக்கு இடையே இயக்கப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக இந்திய ரயில்வே தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

வியன்னா ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோகன் போப்பண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 2-6, 7-5, 10-5 என்ற செட் கணக்கில் டச் நாட்டின் ராபின் ஹசே – ஜெர்மனியின் அலெக்சாண்டர் **Zverev**- இணையை வென்றது.

[]<<<>>>[]

மலேசியாவில் நடைபெற்று வரும் ஜோகர் கோப்பை ஹாக்கிப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா நான்கு - இரண்டு என்ற கோல் கணக்கில் மலேசியாவை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்திய அணி – ஆஸ்திரேலியா அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இந்திய நேரடிப்படி பிற்பகல் மணி 3-45-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

இந்தியா – ஜெர்மனி இடையேயான ஹாக்கிப் போட்டித் தொடர் இன்று புதுதில்லியில் தொடங்குகிறது.

இப்போட்டி பிற்பகல் இரண்டு மணிக்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஒடிஸா அணி இரண்டு – ஒன்று என்ற கோல் கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

[]<<<>>>[]